# C.S.I TAMIL CHURCH - OMAN

# “பாலைவன மன்னா”




**தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள்.**

**லூக்கா 10:42**

**மன்னா – 10** ஜூன் 2020 **பிரதி – 3**



# ஆயர் மடல்



கர்த்தரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

பாடுகளின் நாட்களில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்நாட்களில் பரமனின் பாதம் அமர்ந்து பாதுகாப்பை பெற்றுக்கொள்வது நமது பொறுப்பு. இந்த பாதுகாப்பு நாம், நமது குடும்பம் என்ற அளவில் மட்டும் அல்லாது, நமது திருச்சபை, நமது தேசம், நாம் தங்கியிருக்கும் தேசம், அகில உலக நாடுகள் என்னும் அளவில் விரிவுப்படுத்திக்கொள்வது நல்லது.

## ஜெபித்துக்கொள்வோம்:-

கிடைக்கும் நேரத்தில் எல்லாம் திருமறை வாசிப்போம், தியானிப்போம், ஜெபிப்போம். ஆன்மீக வாழ்வில் ஒருபடி முன்னேறி செல்லுகின்ற நாட்களாகவும், விசுவாசித்து உறுதிபெறும் நாட்களாகவும் இந்நாட்களை பயன்படுத்திக்கொள்வோம்.

## விசாரித்துக்கொள்வோம்:-

நமது நண்பர்கள், உறவினர்கள், பெற்றோர், உடன்பிறந்தோர், குடும்பத்தினர், திருச்சபையினர் என்னும் நிலையில் ஒருவரையொருவர் விசாரித்து அன்பை பகிர்ந்து அவர்களுக்காக ஜெபிக்கவும், உதவிகளைச் செய்யவும் ஊக்கம் அளிக்கும் ஆலோசனைகளைப் பகிர்ந்தும் வாழ்வது இந்நாட்களின் சிறப்பு.

## கடமைகளைச் செய்வோம்:-

நமது நிறுவனங்கள் நமக்கு செய்யவேண்டிய கடமைகள், ஊதியங்கள், விசா புதிப்பித்தல் போன்றவை செய்யப்படவேண்டும் என விரும்புகின்றோம். அதன்படியே நாமும், சமுதாயம், திருச்சபை, சக மக்களுக்கு நிறைவேற்றப்படவேண்டிய கடமைகளை செய்வதில் தவறாதிருக்கக் காத்துக்கொள்வோம்.

## நன்றிக் கூறுவோம்:-

ஒவ்வொரு நாளும் நம்மைக் காத்து வழிநடத்தும் கர்த்தருக்கு நன்றி கூறுவோம். சபை சார்ந்து காலை 9 முதல் 10 மணிவரை நடைபெறும் ஜெபத்தில் இணைந்துக்கொள்வோம். திருச்சபை அமைப்பு சார்ந்து நாம் பெற்றுவரும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம். அதற்காக உழைக்கும், ஜெபிக்கும், கொடுக்கும், ஊக்கமளிக்கும் அனைவருக்காகவும் நன்றி கூறுவோம்.

## விசுவாசிப்போம்:-

வரும் நாட்களில் நாம் இணைந்து இறைதொழுகையில் பங்குபெறும் நாட்களை விசுவாசத்தோடு எதிர்பார்ப்போம். இறை ஆசி நம்மை நிரப்பி புதிய இறை ஆற்றலோடு தொழுகையில் இணைய ஆண்டவர் துணைசெய்வார்.

புதிய மாதத்தின் இறை ஆசி உங்களை நிரப்புவதாக. ஆமென்!

**அன்புடன் போதகர்,**
**Rev. Dr. N. ஜெசின்**

## ஆயர் அருளுரை

## இயேசுவின் பாதம்....

சப்பாணிகள், குருடர், ஊமையர், ஊனர் முதலிய அநேகரை திரளான ஜனங்கள் கூட்டிக்கொண்டு இயேசுவினிடத்தில் வந்து, அவர்களை அவர் பாதத்திலே வைத்தார்கள். அவர்களை அவர் சொஸ்தப்படுத்தினார் (மத்தேயு 15:30).




"இயேசு பாதம் எனக்குப் போதும் எந்த நாளும் ஆனந்தமே" என்னும் பாடல் வரிகள் நமக்கு நம்பிக்கையையும், இயேசு கிறிஸ்துவின் பாதத்தின் மகிமையையும் குறிப்பிடும் ஒன்றாக அமைகிறது.

கை கால் பிடித்தலின் மருவிய வடிவம்தான் காக்காய் பிடித்தல் என்னும் வார்த்தைகள் என்பது நமக்குத் தெரியும் இவ்வகையாக பாதம் அமர்தல் அல்ல. இறை இயேசுவின் பாதம் நமக்கு சுட்டிக்காட்டும் உண்மைகளை உணர்வோம்.

கொடிய வைரஸ் பாதிப்புகள் உலகெங்கும், ஏன் நாம் வாழும் இந்த தேசத்திலும், அண்டை வீட்டிலும், நம்முடைய இல்லங்களிலும் பரவிக்கொண்டிருக்க இயேசு கிறிஸ்துவின் பாதம் அமர்ந்து இருப்பதன் மேன்மையை சுட்டிக்காட்டும் இறை செய்தியாக அமைகிறது. கருத்தாய் தியானிப்போம்.

## 1. கற்றுத்தரும் கர்த்தரின் பாதம்:-

என்னிடத்தில் கற்றுக்கொள்ளுஙகள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் (மத். 11:29) என அருள்நாதர் இயேசு நம்மை அழைக்கிறார். இதை புரிந்துகொண்ட மரியாள் இயேசுவின் பாதத்தில் அமர்ந்து கற்றுக்கொள்ள விழைகிறாள்.



அந்நாட்களில் குருவின் பாதத்தில் அமர்ந்து கற்றுக்கொள்வதும், ஞானத்தைப் பெற்றுக் கொள்வரும் உண்மை சீடத்துவம் என்பது நாம் அறிவோம். அந்நிலையில் மரியாள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள். இந்நிலையில் மார்த்தாளைக் குறித்து வேதம் கூறுகிறது. “மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் வருத்தம் அடைந்து” (லூக். 10:40) இயேசுவிடம் தன் சகோதரியைக் குறித்து குறை கூறியதோடு, உதவிசெய்ய கட்டளையிடக்கோரியும் கூறுகிறாள். இறை மகனாம் இயேசு கிறிஸ்துவோ தேவையானது எது என்று தெளிவுப்படுத்துகிறார். “மார்த்தாளே மார்த்தாளே நீ அநேக காரியங்களைக் குறித்து கவலைப்பட்டு கலங்குகிறாய். தேவையானது ஒன்றே மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார்” (லூக். 10:41,42)

இன்றும் நாம் அநேக காரியங்களைக் குறித்து கலங்குகிறோமோ? கர்த்தரின் பாதம் அமர்வோம்.

## 2. கண்ணீர் துடைக்கும் கர்த்தரின் பாதம்:-

இறை இயேசுவின் பாதத்தில் கண்ணீரோடு வரும் மக்களின் கண்ணீரைத் துடைக்கும் நிலைப்பாட்டை திருமறையில் காணமுடிகிறது. “அவர்கள் கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்” (வெளி 21:4) என்று திருமறை நம்மை அழைக்கிறது. மாற்கு 7-ம் அதிகாரத்தில் அசுத்த ஆவி பிடித்திருந்த தன்னுடைய மகளுக்காக இயேசுவின் பாதத்தில் கண்ணீரோடு விழுந்த தாயைக் குறித்து திருமறை கூறுகிறது. இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் கேள்விப்பட்டு இயேசுவின் பாதத்தில் விழுந்து வேண்டிக் கொண்ட போது அவளது கண்ணீரின் விண்ணப்பம்

அவள் கண்ணீரை அகற்றியது. தன் மகள் விடுதலைபெற செய்த ஆண்டவரின் வல்லச் செயலை கண்டுக்கொள்ள முடிகிறது.

இயேசு கிறிஸ்துவின் கரங்களிலிருந்து அற்புதங்களை ருசித்த மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டுவந்து அதை இயேசுவின் பாதங்களில் பூசி தன் தலைமயிரால் துடைத்தாள் என்று திருமறை கூறுகிறது. இயேசு கிறிஸ்துவின் பாதம் பணிந்த மக்களின் கண்ணீர் துடைக்கப்படும் அனுபவத்தையும், கண்ணீர் துடைக்கப்பட்டவர்கள் பாதம் பணிவதையும் காணமுடிகிறது. நம் கண்ணீர் துடைக்கப்படும்படி கர்த்தரின் பாதம் அமர்ந்திருக்க முயல்வோமா?

### 3. கட்டுகளை நீக்கும் கர்த்தரின் பாதம்:-

இயேசுவுக்கு அன்பாயிருந்த குடும்பம் பெத்தானியாவிலுள்ள லாசரு, மரியாள், மார்த்தாள் குடும்பம். இந்த குடும்பத்தில் லாசரு வியாதிப்பட்டான். இந்த செய்தி இயேசு கிறிஸ்துவுக்கும் சொல்லப்பட்டது. ஆனால் திருப்பணியின் நிமித்தமாக மேலும் தங்கினார். லாசரு மரித்துப்போய்விட்டான் என்ற செய்தி வருகிறது. எனவே இயேசு கிறிஸ்து பெத்தானியா வருகிறார் என்று அறிந்த மரியாள் "இயேசு இருந்த இடத்தில் மரியாள் வந்து, அவரைக் கண்டவுடனே அவர் பாதத்தில் விழுந்து; ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான் என்றாள்" (யோவான் 11:32).

அழுகிறதைக் கண்டார். தானும் கண்ணீர் விட்டார். கல்லறையண்டை வந்தார்; மூடியிருந்த கல்லை எடுத்துப்போடுங்கள் என்றார். பிதாவினிடம் வேண்டிக்கொண்டார். "லாசருவே வெளியே வா" என்று உரத்த சத்தமாய் கூப்பிட்டார்" (யோவான் 11:43). சீலைகளினால் கட்டப்பட்ட நிலையில் வெளியே வந்தவனின் கட்டுகளை அவிழ்க்கும்படி கூறினார். விடுதலையாக்கினார்.

மரணக்கட்டுகளிலிருந்தும் நம்மை விடுதலையாக்க இயேசு பாதம் போதும் என்னும் நற்செய்தியை இந்நிகழ்வு நமக்கு விளக்குகிறது.

இறையன்புக்குரியோரே! இயேசு பாதம் நமக்கு கற்றுத்தரும் பாதமாய், கண்ணீர் துடைக்கும் பாதமாய், கட்டுகளை நீக்கும் பாதமாய் அமைகிறது என்று திருமறை கூறுகிறது. அவர்பாதம் அமர்ந்து ஜெபித்து, துதித்து, திருமறை வாசித்து, தியானித்து, இறைசெய்தி கேட்டு அதன்வழி நடக்க ஒப்புக்கொடுக்கவேண்டும் என்பதை ஆண்டவர் விரும்புகிறார்.


விரைவான பணிகள், விரைந்தோடும் கார்கள், விரைவாக ஓட்டம், கம்ப்யூட்டர், அலைபேசி, வாட்சப், பேஸ்புக், வலைதளங்கள் நம்மை வலைபோட்டு பிடிக்கும் நேரத்திலும் இறைபாதம் அமர நேரம் ஒதுக்குவோம். அமர்ந்து, அவர் அன்பை உணர்ந்து அர்ப்பணிப்போம் என்றால் நம்மையும் ஆண்டவர் ஆசீர்வதிப்பார். ஆமென்!

**அன்புடன் போதகர்,**

**Rev. Dr. N. ஜெசின்**

## சிறுவர் பகுதி

## ஆலயத்தை நோக்கி...



ஒரு மனிதர் அதிகாலையில் எழுந்து தேவனை ஆராதிக்க ஆலயத்துக்குச் சென்றார். செல்லும் வழியில் இடறி கீழே விழுந்துவிட்டார். தட்டுத்தடுமாறி எழுந்தவர் தம் ஆடையில் அழுக்கு படிந்ததால் மீண்டும் தன் வீட்டிற்குச் சென்று ஆடையை மாற்றிக்கொண்டு மீண்டும் ஆலயத்திற்குச் செல்லப் புறப்பட்டார். வழியில் அவர்தாம் விழுந்த அதே இடத்திலேயே மீண்டும் விழுந்துவிட்டார். திரும்பவும் எழுந்தவர் மீண்டும் தன் ஆடையை மாற்றும்படி வீட்டிற்கு சென்று மாற்றிக்கொண்டு திரும்பவும் ஆலயத்திற்குச் செல்ல புறப்பட்டார்.

அப்போது வழியில் ஒருவர் தம் கையில் விளக்குடன் நிற்பதை கண்ட அவர் 'யார் நீங்கள், ஏன் இங்கு கையில் விளக்குடன் நிற்கிறீர்கள்' என்று அந்த மனிதனிடம் கேட்டார். அதற்கு அந்த மனிதன், 'நீங்கள் ஆலயத்துக்குச் செல்லும் வழியில் இருமுறை கீழே விழுந்ததை பார்த்தேன். ஆகையால் உமக்கு உதவுவதற்காக நான் இங்கு கையில் விளக்குடன் உமக்காக காத்திருக்கிறேன்' என்றான். ஆலயம் செல்ல புறப்பட்டவரோ, "ஐயா, தாங்கள் யாரோ, எவரோ எனக்காக உதவும்படி வந்திருக்கிறீரே, மிகவும் நன்றி! எனக் கூறினார்.

பின்பு இருவரும் ஆலயத்துக்குச் சென்றார்கள். ஆலயத்துக்குள் சென்ற விசுவாசமுள்ள மனிதர் தனக்கு உதவிய மனிதனை நோக்கி, "நீங்களும் உள்ளே வாருங்கள் தேவனை ஆராதிப்போம்" என்றார். அதற்கு அந்த மனிதன் மறுத்துவிட்டான். இவர் எவ்வளவோ சொல்லியும்

அந்த மனிதன் உள்ளே செல்வதற்கு மறுத்துவிட்டான். இவரோ அந்த மனிதனை நோக்கி, “ஏன் நீங்கள் உள்ளேவர மறுக்கிறீர்கள்? என்று கேட்டார். அதற்கு அந்த மனிதன் “நான்தான் சாத்தான்” என்றான். அதைக்கேட்டு அதிர்ச்சியடைந்த அந்த விசுவாசமுள்ள மனிதர், “நீதான் சாத்தானா?, பின் ஏன் நீ ஆலயத்துக்குச் செல்ல எனக்கு உதவிசெய்தாய்” என்றுக் கேட்டார். அதற்கு சாத்தான், “நான் உன்னை முதல்தரம் கீழே விழச் செய்தபோது நீ முறுமுறுக்காமல் உன் வீட்டிற்கு சென்று ஆடையை மாற்றிவிட்டு மீண்டும் ஆலயத்துக்குச் செல்ல புறப்பட்டாய். உன் விசுவாசத்தைக் கண்ட தேவன், உன் பாவங்களையெல்லாம் மன்னித்தார்”. இரண்டாவது முறை உன்னை மீண்டும் அதே இடத்தில் கீழே விழச் செய்தேன். ஆனால் அது உன் ஆர்வத்தை குறைக்கவில்லை. நீ மீண்டும் வீட்டிற்குச் சென்று ஆடையை மாற்றிக்கொண்டு ஆலயத்திற்குச் செல்ல புறப்பட்டாய். உன் பக்தி வைராக்கியத்தைக் கண்ட தேவன், “உன் குடும்பத்தாரின் பாவங்களையெல்லாம் மன்னித்தார்”. அதைக் கண்டு பயந்த நான் எங்கே நீ மூன்றாவது முறையும் கீழே விழுந்து மீண்டும் ஆலயத்துக்கு செல்வதை தேவன் பார்த்து அதினிமித்தம் உன் தேசத்தாரின் பாவங்களை மன்னித்து விடுவாரோ என பயந்துதான் “நான் தள்ளிவிடாமல் எங்கே நீயாகவே விழுந்து விடுவாயோ என்று உனக்கு உதவிசெய்ய கையில் விளக்குடன் வந்தேன்” என்றான். “தமது நாமத்திற்காக காண்பித்த அன்புள்ள பிரயாசத்தை மறந்துவிடுகிறதுக்கு தேவன் அநீதியுள்ளவரல்ல” (எபி. 6:10) என வேதம் அறுதியிட்டு கூறுகின்றது. நமது விசுவாசம், உண்மை, நீதி, பக்தி வைராக்கியம், கீழ்ப்படிதலினிமித்தம் நம் குடும்பம், நம் தேசம் பாதுகாக்கப்படும், இரட்சிக்கப்படும், ஆசீர்வதிக்கப்படும். ஆகையால் நாம் விசுவாசத்தில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக.

**அன்புடன் போதகர்**

## *New Arrivals*

### “பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்”



**Baby Boy**

**S/o Mr. Ramji Rajarethinam & Mrs. Christy R. Sterbie**

**27-05-2020**

## அடைக்கலமாகும் தேவ சமூகம்

இறை இயேசுவில் அன்பானவர்களே!

இறை சமூகம் நமக்கு அடைக்கலம் என்பதை உணரும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். உபத்திரவம், வியாதிகள், பாடுகள் நிறைந்த உலகில் நம் நம்பிக்கையும், துணையும், பெலனுமாகும் இயேசுவை சார்ந்துகொள்ளும்போது நாம் வாழ்வு பெறுகிறோம் என்பதுதான் உண்மை.

“தேவன் நமக்கு அடைக்கலமும், பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்” (சங்கீதம் 46:1).



ஐரோப்பாவின் வடக்கில் உள்ள நாடுகளில் காடுகள் ஏராளம். அங்குள்ள ஒரு காட்டிற்கு சென்று இன்பமாக நாளை கழிக்கலாமென்று ஒரு நண்பர் கூட்டம் எண்ணியது. அவர்கள் சுமார் பதினைந்து பேர் இருப்பார்கள். இரண்டு மூன்று வீட்டினர் ஒன்றாக வந்திருந்தனர். சமைத்த பண்டங்களை சாப்பிட்டபின் பேசி கொண்டிருக்கையில் தொலைவில் ஒரு கண்ட காட்சி அவர்களை அப்படியே தூக்கிவாரிப்போட்டது. என்னது புகை? நெருப்பு? அக்காட்டில் ஒரு பகுதியில் மூங்கில் போன்ற மரங்கள் ஒன்றோடொன்று மோதி உராய்ந்ததன் விளைவாக தீப்பொறி பறந்தது. அது பெருந்தீயாக காட்டையே பற்றிக்கொண்டது. அதை கண்ணுற்ற அவர்கள் தங்களுக்கு இறுதிக்கட்டம் வந்தது என்று அறிந்து வேதனைப்பட்டனர்.

இந்த நிலையில் இத்தீயை சமாளிக்க சிறுவன் ஒருவன் முன்வந்தான். கையிலிருந்த தீப்பெட்டியினுள் ஒரு தீக்குச்சியை எடுத்து உரசி பின்பு சருகுகள் நிறைந்த இடத்தில் அதை போட்டான். காட்டுத்தீ பரவி தங்களை நோக்கி வருவதற்குள் இந்த பையன் வேறுபக்கத்திலேயே நெருப்பு வைத்துவிட்டானே என்று எல்லாரும் அவனை அடித்துவிட்டார்கள். அதற்குள் அவன் வைத்த நெருப்பு தன் வேலையை முடித்துவிட்டது. சுமார் ஐம்பது அடி சுற்றளவிலுள்ள புல் பூண்டுகளெல்லாம் வெந்து சாம்பலாயின. அங்குள்ளவர்கள் மத்தியில்

நின்று என்ன செய்வதென்று அறியாமல் திகைத்தனர். அப்போது காட்டுத்தீ அவர்களை சுற்றிலும் பரவி நன்றாக எரிந்தது. ஆனால் என்ன அதிசயம். அவர்களிடம் வரவேயில்லை. ஏனென்றால் அவர்கள் நின்றிருந்த இடம் வெந்து சாம்பலான இடம். காட்டுத்தீக்கு அங்கு இரை ஒன்றுமில்லை. பையன் வைத்த நெருப்பு ஏற்கெனவே தன் வேலையை முடித்ததால் அந்த இடம் பாதுகாப்பானதாக மாறவே அனைவரும் பேராபத்தினின்று காப்பாற்றப்பட்டனர்.

ஆம் இதைப் போன்றுதான் பாவ விளைவுகளால் நமக்கு எதிராக புறப்பட்ட நரக தீயினின்றும் நாம் பாதுகாக்கப்படுகின்றோம். அது எப்படி? பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும் (எசேக்கியல் 18:4). பாவத்தின் சம்பளம் மரணம் (ரோமர் 6:23) இறுதியில் நியாயந்தீர்க்கப்பட்டு, முடிவில்லா வேதனையுள்ள என்றென்றும் தீ எரிந்துகொண்டிருக்கும் நரகத்தில் தள்ளப்படவேண்டும். இதுவே மனிதனுக்கு ஏற்பட்ட தீர்ப்பாயிருந்தது.

## 1. பாவத்திலிருந்து காக்கும் தேவசமூகம்:-

கர்த்தர் நம்மில் மிகவும் இரக்கம் உள்ளவராய் காணப்படுகிறார். நம்மை பாவ சாபத்தினின்றும், கொடிய நரகாக்கினையில் இருந்தும் விடுவிக்கும்படியாக இயேசு என்னும் நாமத்தில் இவ்வுலகில் வந்து பிறந்தார். முறையாக நாம் பெறவேண்டிய தண்டனையை இயேசுதாமே தன் சரீரத்தில் ஏற்றுக்கொண்டார். முழு உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டியாக நமக்காக பலியானார் (யோவான் 1:29). இதை ஒரு மனிதன் ஏற்று இயேசுவண்டை வரும்போது, தீமையினின்று காக்கப்படுவது மட்டுமல்ல கூடவே இளைப்பாறுதலையும் இயேசு தருகிறார். இந்த இளைப்பாறுதலை பெற்றுக்கொள்ள இன்றே இயேசுவை அண்டிக்கொள்ளுங்கள்.

தேவன் கொடுக்கும் இந்த அருமையான இலவசமான இளைப்பாறுதலை ஏற்றுக்கொள்ளாதபடி நமக்காக தமது சரீரத்தில் கிறிஸ்து வாரினால் அடிக்கப்பட்டார், பாடுகளை சகித்தார் என்பதை விசுவாசியாத ஒரு கூட்ட ஜனம், தங்களை தாங்களே, சங்கிலிகளால் அடித்துக்கொண்டு, இரத்தம் வரும்வரை தங்களை துன்புறுத்திக்கொண்டு தங்கள் முதுகுகளில் கம்பிகளை மாட்டிக்கொண்டு, இரதங்களை இழுத்து, பாடுகளை சுமந்து அப்படியாவது தங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்காதா என்று ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி எல்லாம் உடலை வருத்தி இரட்சிப்பை பெற்றுக்கொள்ளவே முடியாது. ஏற்கனவே அவற்றை சுமந்து தீர்த்த தேவன் ஒருவர் உண்டு. அவருடைய பாவமில்லாத இரத்தத்தால் நம்முடைய பாவங்கள் கழுவப்படுகிறது. இரட்சிப்பு நமக்கு அருளப்படுகிறது.

## 2. பரலோகில் சேர்க்கும் தேவசமூகம்:-

கிறிஸ்தவரல்லாத ஒருவர் சமீபத்தில் நீ நரகத்திற்கா? பரலோகத்திற்கா? எங்கு செல்லப்போகிறாய்? என்று கேட்டார். நான் உறுதியாக "நிச்சயமாக நான் பரலோகத்திற்குதான் செல்வேன்" என்று கூறினேன். அதற்கு அவர், "என்ன உன் கடவுள் உன்னிடம் அப்படி சொன்னாரா?" என்று கேட்டார். நான் அதற்கு "நான் இரட்சிக்கப்பட்டேன், அதனால்தான் நரகத்திற்கு செல்லமாட்டேன்" என்றேன். எனக்கு புரியவில்லை, இரட்சிப்பு என்றால் என்ன? என்று கேட்டார். நான் அவரிடம், "இரட்சிப்பு என்றால், இயேசு எனக்காக இரத்தம் சிந்தினார், நான் அவருடைய இரத்தத்தினால் கழுவப்பட்டபடியால் இரட்சிக்கப்பட்டேன், ஆகையால் நான் நிச்சயமாக நரகத்திற்கு செல்லமாட்டேன், பரலோகத்திற்குதான் செல்வேன் என்று உறுதியுடன் கூறுகிறேன். அவரால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. கடந்துபோய் விட்டார். கூட வேலை செய்யும் மற்றவர்கள், "நீ எப்படி அப்படி உறுதியாய் சொல்லமுடியும்; நீ பரலோகத்திற்கு செல்வாய் என்று, எங்களால் அப்படி நிச்சயமாக கூற முடியாது" என்று சொன்னார்கள். அவர்களும் கிறிஸ்தவர்களே! நான் கூறினேன், "நம்முடைய கிரியைகளோ, நம்முடைய எந்த செயல்களும் நம்மை பரலோகம் கொண்டு சேர்க்காது. இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டால் மாத்திரமே பரலோகம் செல்லமுடியும்" என்று அழுத்தமாக கூறினேன். கிறிஸ்தவர்களாயிருந்தாலும், இன்னும் இரட்சிப்பைக் குறித்து அறியாத அந்தக் கூட்டத்தினருக்காக ஜெபிக்கவேண்டும்.

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே! கிறிஸ்துவின் வருகை மிகவும் சமீபமாக இருக்கிறது என்பதை இன்றைய நிகழ்வுகள் நமக்கு வெளிப்படுத்தி நிற்கிறது. இந்நாட்களில் இறைபாதம் அமர்ந்து அனைத்து மக்களின் இரட்சிப்புக்காக ஜெபிக்க வேண்டியது நமக்கு கடமை என்பதை உணருவோம்.

இந்த விடுமுறை நாட்களில் அதிகமாக ஆண்டவர் பாதம் அமர்வோம். அதிகமாக பாரத்தோடு ஜெபிப்போம். கொடிய வியாதிகளிலிருந்து ஆண்டவரால் நாம் காக்கப்படவேண்டும். அனைத்து மக்களும் விடுதலைபெற வேண்டும். மக்களின் வாழ்வாதாரங்கள் காக்கப்படவேண்டும். இரட்சிப்பின் அனுபவம் மக்களிடம் உருவாகவேண்டும் என்னும் பாரம் நமக்குள் உருவாகவேண்டும். இந்த இரட்சிப்பின் அனுபவத்துடன் கூடிய ஜெபம் காட்டுத்தீயைப் போல பரவி

தேசம் எங்கும் எழுப்புதல் தீயாக பரவவேண்டும். இதுவே ஆண்டவர் நம்மிடம் விரும்பும் ஒன்று என்பதை உணர்ந்து செயல்படுவோம். இறை ஆசி பெறுவோம்!

**அன்புடன் பெண்கள் சங்க தலைவி,**

**திருமதி D. ஷர்மிளா ஜெசின்**

## மனிதர்களை தேடிய மாமனிதர்கள்
## அலெக்சாண்டர் சில்வர்

### ஏழைகள் மத்தியில் இறைவன்

**மண்ணில்** : 02-06-1883
**விண்ணில்** : 11-04-1954
**ஊர்** : பெர்த்சயர்
**நாடு** : ஸ்காட்லாந்து
**தரிசன பூமி** : இந்தியா

இறைப்பணி என்பது வெறும் வேதாகமத்தைப் போதிப்பது மட்டுமல்ல. அது சமூகப் பணிகளையும் சார்ந்தது. சமூகத்தைப் பாராமல் கடவுளையே சார்ந்திருப்பது என்பது ஏமாற்றுத்தனம். கண் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமல் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூர முடியும்? வசனம் நம்மைத் தெளிவுப்படுத்துகின்றது.

ஸ்காட்லாந்தில் பிறந்த அலெக்சாண்டர் சில்வர் இந்தியாவின் மீது இருந்த அன்பினாலும், இறைவன் மீது இருந்த பற்றினாலும் ஏழை மக்களைத் தேடி இந்தியா வந்தார்.

உயர்ஜாதி மக்களை கிறிஸ்துவுக்குள் கொண்டு வருவதன் மூலம் தாழ்ந்த ஜாதி மக்களையும் மாற்றிவிடலாம் என்று எண்ணிக்கொண்டிருந்த ஸ்காட்லாந்து மிஷனெரிகள் மத்தியில் அலெக்சாண்டர் வித்தியாசமாக செயல்பட்டார். ஏழை எளிய மக்களுடன் ஒரு சாதாரண மனிதனாக இணைந்து வாழ ஆரம்பித்தார்.

அரக்கோணம் என்ற பகுதியில் வாழ்ந்த மக்கள் அறியாமையிலும், வறுமையிலும் மிகவும் இழிவான நிலையில் வாழ்ந்தனர். தீண்டாமைக் கொடுமையில் சிக்கித் தவித்தனர். அடிமை வாழ்வு மலிந்து கிடந்தது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் கிராம மக்களுக்குக் கல்வி தந்து அவர்களின் வழிகாட்டியாக விளங்கினார் அலெக்ஸாண்டர். அனைத்து சமயத்தவரையும் பள்ளியில் சேர்த்து அவர்களுக்கு வேதாகமத்தையும், பாடங்களையும் சொல்லிக் கொடுத்தார். பல பள்ளிகள் ஆரம்பிக்கப்-

பட்டன. மாணவர்களுக்கும்,மாணவிகளுக்கும் தனித்தனியே விடுதிகளைக் கட்டி அனைவரும் சமமுடன் தங்கிப் படிக்க வழி செய்தார்.

குதிரை மீதே சவாரி செய்து நற்செய்தி பரப்புவதில் சோர்ந்திடாமல் உழைத்த அலெக்ஸாண்டர் பிறந்தது ஜுன் 2 என்பது மகிழ்ச்சியையும், புது முயற்சிகளையும் தருகின்றது.

அன்பரே! சமூகப் பணிகளில் உங்களின் ஈடுபாடு என்ன?

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு** : ஜீவியம் ஒன்றே ஒன்றுதான். அது விரைவில் கழிந்துவிடும். நாம் கிறிஸ்துவுக்காக என்ன செய்தோமோ அது மட்டுமே நிலைநிற்கும்.

**குயவனின் கரங்களில்** : ஆண்டவரே! என் ஜீவிய காலமெல்லாம் உம் நாம மகிமைக்காக உயர்ந்த பணிகளைச் செய்வேன்.

**தியானத்திற்கு : யோசுவா 19, ஏசாயா 25, எபிரெயர் 8-9**

## கர்த்தரின் பாதத்தின் மகிமை

கர்த்தரின் பாதத்தில் நம்மை முழுமையாக ஒப்புவிப்பதன் மூலம் நாம் பெறும் நன்மைகள் பல இருக்கின்றன.

### 1. புதுபெலன் தரும் இறைவன் (1கொரி. 6:14)

தூய அகஸ்டின் என்பவர் மனிதர்களின் நான்கு நிலைகளைப் பற்றி கூறுகிறார். முதல் நிலை மனிதன் **தன் மாமிச இச்சைகளில் வாழ்தல்**. இது ஆற்றல் இல்லாத மனநிலையைக் குறிக்கிறது. இத்தகைய மனிதவாழ்வு சில வேளைகளில் மிருகங்களிடம் காணப்படும் ஒழுக்கத்தைவிட கீழானதாக இருக்கும்.

இரண்டவாது நிலை, **தீமைகளுக்கு சட்ட அங்கீகாரம் கொடுத்தல்**. இன்று உலகில் நடைபெறும் பலத் தவறுகள் சட்ட அங்கீகாரம் பெற்று வருகின்றன. குறிப்பாக ஆணை ஆண் திருமணம் செய்வதும், பெண்ணைப் பெண் திருமணம் செய்வதும் கடவுளின் பார்வையில் பெரும் பாவம். ஆனால் இன்று அநேக நாடுகள் இதற்கு சட்டப்பூர்வமான அங்கீகாரம் அளித்து வருகிறது. இதுபோன்று மது அருந்துதல், புகையிலை பயன்படுத்துதல் போன்ற தீமைகள் சட்ட அங்கீகாரத்துடன் மனிதனைக் கெடுத்து வருகின்றன.

மூன்றாவது நிலை, **கடவுளின் உதவி மீது நம்பிக்கை கொண்ட நிலை** இந்த நிலையில் மனிதன் கடவுளின் தூய ஆவியருக்கு தன்னில் இடம்கொடுக்க ஆரம்பிக்கின்றான். இந்நிலையில் மனிதன் தன்னகத்தே உள்ள பாவக்கறைகளை அறிந்து ஆண்டவரின் பாதத்தில் ஊற்றி அவற்றை மேற்க்கொள்ள போராடுகின்றான். ஏனெனில் அவன் முழுமையான கடவுளின் ஆற்றலுக்கு இடம்கொடுக்கவில்லை.

நான்காவது நிலை, **கடவுளுக்குள் முழுமையான அனுமதி பெற்ற நிலை** இந்த நிலையில் மனிதன் கடவுளுடன் முழுமையாக இசைந்து இணைந்து வாழ்கின்றான். இதற்கு தூய ஆவியரின் வல்லமை முழுமையாக துணைபுரிகிறது. 1 கொரிந்தியர் 6:14-ல் பவுலடிகளார் இயேசு கிறிஸ்துவை உயிர்த்தெழச் செய்த கடவுளின் ஆற்றல் நம்மையும் அவர் தருகின்ற புதுவாழ்வின் அனுபவத்தில் உயிர்த்தெழச் செய்து, தமது ஆற்றலைத் தந்து அந்த வாழ்வில் நம்மை நடத்துவார் என்று கர்த்தர் கூறுகிறார். அந்த புதியப் பெலனைப் பெற்று நாம் இவ்வுலகில் இறைவனை வெளிப்படுத்துவோம். இறைவனிடம் முழுமையாக நம்மை ஒப்புக்கொடுத்து அவர் பாதம் அண்டி செல்லும்போது நிறைவான ஆற்றலைப்பெற்று புதுபெலனோடு வாழும் வாழ்க்கையைப் பெறுவோம்.

## 2. விடுதலை தரும் இறைவன் (ஏசா. 42:3)

மேசியா இந்த உலகில் மனிதர் தங்கள் வாழ்க்கை சிக்கல்களுக்குள் சிக்கித் தவிக்கும்போது அவர்களுக்கு விடுதலை தருபவராகவும், இந்த உலகத்தில் நியாயத்தை நிலைநிறுத்துகிறவராகவும் காணப்படுவார் என்று ஏசாயா தீர்க்கர் குறிப்பிடுகிறார். நியாயத்தை நிலைநிறுத்தும்போது போராட்டம் உண்டு. ஆனால் வாழ்க்கையில் உடைந்திருக்கும் மக்களும், தங்கள் வாழ்வில் ஆற்றல் இழந்து நிற்கும் மக்களும் தங்கள் வாழ்வில் அழிந்துவிடாமல், அவர்களை சீர்ப்படுத்தி ஆற்றல்படுத்தி விடுதலை செய்கிறவராக மேசியா காணப்படுகிறார். எனவேதான் தூய பவுலார் 2கொரிந்தியர் 4:8,9 ஆகிய வசனங்களில் நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கி போகிறதில்லை, கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை, துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை, கீழே தள்ளப்பட்டும் மடிந்துபோகிறதில்லை என்று கூறுகின்றார். இந்த உலகில் சமூக மாற்றத்திற்காக எத்தகையை போராட்டங்கள் நடந்தாலும் அவற்றினால் எளியவர்களும், வாழ்க்கையில் பல்வேறு துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறவர்களுமே பாதிப்படைவார்கள். இறைவனின் வழியில் நடைபெறும் சமூக மாற்றத்திற்கான போராட்டத்தில் ஒடுக்கப்பட்டவர்கள், ஓரம் கட்டப்பட்டவர்கள் மற்றும் எளியவர்கள், வாழ்க்கையில் நிமிர்ந்து நிற்க முடியாதபடி நெருக்கப்பட்டவர்கள் ஆகியோர் தங்கள் வாழ்வில் முழுநிறைவு காண்பர். எனவே நாமும் நீதிக்கும் அமைதிக்கும் நேராய் எம்மை நடத்தியருளும் இறைவா என்று இறைவனின் பாதத்தைப் பற்றிபிடித்து வாழ்வோமாக.

**- V. G. மஹிழா ஜெங்கின்**

## ஜுன் 2020 மாத கேள்விகள்

## (சங்கீதம் 124 - 139 வரை)

1. பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறவர்கள் யார்?
2. கர்த்தர் மேகங்களை எங்கிருந்து எழும்பப் பண்ணுகிறார்?
3. வானத்தையும், பூமியையும் உண்டாக்கின கர்த்தருடைய நாமத்தில் உள்ளது எது?
4. யார் கெம்பீரத்தோடே அறுப்பார்கள்?
5. கர்த்தர் எதை வாசஸ்தலமாகும்படி விரும்பினார்?
6. தேவன் யாரை அழித்தாரானால் நலமாயிருக்கும்?
7. கர்த்தர் யாரை தூரத்திலிருந்து அறிகிறார்?
8. நீதிமான்களுடைய சுதந்திரத்தின்மேல் நிலைத்திராதது எது?
9. பால் மறந்த குழந்தையைப்போல அடக்கி அமரப்பண்ணப்பட்டது எது?
10. எப்பொழுது விடியும் என்று விடியற்காலத்துக்கு காத்திருக்கிறவர்கள் யார்?
11. வேடனுடைய கண்ணிக்குத் தப்பின குருவியைப்போல தப்பியது எது?
12. தேவனுடைய ஆலோசனை எனக்கு எப்படிப்பட்டவைகள்?
13. கர்த்தர் யாரை அக்கிரமக்காரரோடே போகப்பண்ணுவார்?
14. தலைமுறை தலைமுறையாக இருப்பது எது?
15. கர்த்தர் யாரை தமக்குச் சொந்தமாக தெரிந்துகொண்டார்?
16. பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக்கன்றுகளைப்போல் இருப்பவர்கள் யார்?
17. கர்த்தர் என் நினைவுகளை எங்கிருந்து அறிகிறார்?
18. எர்மோன் மேலும், சீயோன் பர்வதங்கள் மேலும் இறங்குவது எது?
19. கர்த்தரால் கிடைக்கும் பலன் எது?
20. இஸ்ரவேலர் கின்னரங்களை எந்த செடியின்மேல் வைத்தார்கள்?

## மே 2020 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. கற்பனை – சங்கீதம் 119:96
2. ஆத்துமாவை – சங்கீதம் 116:8
3. வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு – சங்கீதம் 119:165
4. யூதா – சங்கீதம் 114:2
5. சுகஜீவிகளுடைய – சங்கீதம் 123:4
6. இருதயம் - சங்கீதம் 119:70
7. வசனம் - சங்கீதம் 119:49,50
8. எருசலேம் - சங்கீதம் 122:3
9. கற்பாறையை – சங்கீதம் 114:8
10. ஆத்துமா – சங்கீதம் 119:28
11. விக்கிரகங்கள் - சங்கீதம் 115:4
12. கர்த்தருடைய ஆலயத்திற்கு – சங்கீதம் 122:1
13. நீதிமான்களுடைய கூடாரங்களில் - சங்கீதம் 118:15
14. கர்த்தருடைய சாட்சிகள் - சங்கீதம் 119:24
15. கர்த்தர் - சங்கீதம் 121:5
16. பரிசுத்தவான்களின் மரணம் - சங்கீதம் 116:15
17. வேதத்தில் - சங்கீதம் 119:113
18. பண்டிகைப்பலி – சங்கீதம் 118:27
19. கர்த்தருடையவைகள் - சங்கீதம் 116:15
20. கண்கள் - சங்கீதம் 119:82,123

## மே 2020 மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| Mrs. Anbu Selvi Daniel Raj | Mrs. Jenshy N. Lenin | Mrs. Regin Justa Vinolin |
| Mrs. Ancy Daniel | Mrs. Jeya Rani Victor | Mrs. Sapthekha Jerry Sathya |
| Mrs. Ashika Joel | Mrs. Josephin Anto Kingston | Mrs. Sarah Rajasingh |
| Mrs. Aspin Bejo | Mrs. Juslin Jaslin | Mrs. Sathya Priya Ramesh |
| Mrs. Boopathi Baskar | Mrs. Leela Gladson | Mrs. Shabila Gnanadhas |
| Mrs. Evangelin Yesudhas | Mrs. Manju Martin | Mrs. Shiney Johan |
| Mrs. Felsi Rani John | Mrs. Mary Praveena Gobinath | Mrs. Thamari Johnson |
| Mrs. Golden Irene Sheeja Robin | Mrs. Percy Jean | Mrs. Vanitha Rani Prince |
| Mrs. Gracilin Melba Sujin | Mrs. Priyadarsini Kanagavel | Mrs. Vency Deepa Kannan |
| Mrs. Jancy Deepa Victor | Mrs. Pushpa Rani Moorthy | Mrs. Virgin Jegatha Jino |

## ஜுன் 2020 மாத கேள்விகள்
## (யோபு 11-20)

1. தன்னிடத்தை விட்டு பேராதது எது?
2. வாழ்நாள் குறுகினவனும், சஞ்சலம் நிறைந்தவனுமாயிருக்கிறவன் யார்?
3. காட்டுக் கழுதைக்குட்டிக்கு ஒப்பாக பிறந்தவன் யார்?
4. யோபுவுக்கு சாட்சி பகருகிறவர் எங்கே இருக்கிறார்?
5. கடைசி நாளில் பூமியின் மேல் நிற்பவர் யார்?
6. துன்மார்க்கருடைய நம்பிக்கை எப்படி அழிந்துபோகும்?
7. மாயையை நம்பினால் கிடைப்பது எது?
8. யாருடைய சந்தோஷம் ஒரு நிமிஷம் மாத்திரம் நிற்கும்?
9. வார்த்தைகளைச் சோதித்துப்பார்க்கிறது எது?
10. துன்மார்க்கருடைய வாசஸ்தலத்தின்மேல் என்னத் தெளிக்கப்படும்?
11. அசுத்தமானதிலிருந்து பிறப்பிக்க கூடாதது எது?
12. சேற்றுக் குவியல்களுக்குச் சமானம் எது?
13. தன் சிநேகிதருக்குக் கேடாகத் துரோகம் பேசுகிறானோ அவன் பிள்ளைகளின் தண்டனை எது?
14. வருஷங்களின் தொகை யாருக்கு மறைக்கப்பட்டிருக்கிறது?
15. சுகமாயிருக்கிறவனுடைய நினைவில் இகழ்ச்சி அடைகிறவன் யார்?
16. பட்டயத்தினால் உண்டாகும் ஆக்கினையை வரப்பண்ணுவது எது?
17. ஒரு கட்டாகக் கட்டப்பட்டு முத்திரைப்போடப்பட்டிருக்கிறது எது?
18. யோபு எங்கு தன் படுக்கையை போடுவேன் என்றான்?
19. யாருடைய கூடாரங்களை அக்கினி பட்சிக்கும்?
20. பிதாக்கள் சொல்லக்கேட்டு மறைக்காமல் அறிவித்தவர்கள் யார்?

## மே 2020 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. மாயக்காரரின் நம்பிக்கை – யோபு 8:13,14
2. யோபு - யோபு 2:10
3. புல்லிருக்கிற இடம் - யோபு 6:5
4. திரியாவரக்காரனின் - யோபு 5:13
5. கல்தேயர் - யோபு 1:17
6. பொறாமை – யோபு 5:2
7. முட்டையின் வெள்ளைக்கரு – யோபு 6:6
8. நம்முடைய நாட்கள் - யோபு 8:9
9. திமிங்கலம் - யோபு 7:12
10. மத்தியஸ்தன் - யோபு 9:33
11. இரவு பகல் ஏழுநாள் - யோபு 2:13
12. தோற்றங்கள் - யோபு 4:13
13. சிசுக்கள் - யோபு 3:16
14. நாலு மூலையிலும் - யோபு 1:19
15. உபாதிக்கப்படுகிறவனுக்கு – யோபு 6:14
16. உத்தமனை – யோபு 8:20
17. கொடிய பருக்களால் - யோபு 2:7
18. தேவனால் உண்டாகும் பயங்கரங்கள் - யோபு 6:4
19. கர்த்தருடைய வருஷங்கள் - யோபு 10:6
20. கதறுதல் - யோபு 3:24

## மே 2020 மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| Mr. Alex Baskar | Mr. Jaslin Sundara Kumar | Mr. Lenin Raj |
| Mr. Anshio Shajin | Mr. Jean C. R. Shibin | Mr. Prince J. P. |
| Mr. Anu | Mr. Jino John | Mr. Rajan V. N. |
| Mr. Austin Daniel Raj | Mr. Johan Pratheep | Mr. Ramesh R. |
| Mr. Bejo Nelson | Mr. Justus Martin | Mr. Robin Devadhas |
| Mr. Daniel Raj P. | Mr. Kanagavel | Mr. Sujith Gladson |

# May God Bless All

## Birthday Celebrants – June 2020

| | |
|---|---|
| 01st June | Mr. Sheeju Johnson |
| 02ndJune | Master. Ronnie Robin Garwin, S/o Mr. Robin Raj |
| 02ndJune | Mr. Arunpaul |
| 02nd June | Mr. Winson |
| 03rd June | Mr. Isaac Solomon |
| 04th June | Mr. M. Sujin |
| 05th June | Miss. Felyn Dannah, D/o Mr. Immanuel Prince |
| 05th June | Master. N. Jan Godwin, S/o Mr. Nethaji Jacob Durai |
| 06th June | Mr. Anu |
| 06th June | Mrs. Geetha, W/o Rex Macedo |
| 09th June | Miss. Zionagen Mayshack, D/o Mr. Mayshack |
| 10th June | Mr. Kingsly |
| 10th June | Mrs. Aspin Mercilent Ethel, W/o Bejo |
| 12th June | Master. K. Allon Joshua, S/o Mr. Kanagavel |
| 16th June | Miss. Struana Sujith, D/o Mr. Sujith Gladson |
| 17th June | Mr. Daniel Raj |
| 17th June | Mr. J. S. Emman Jasolin |
| 20th June | Miss. Praylin Mathney, D/o Mr. Anto Kingston |
| 21st June | Miss. Oshin Kingsly Paul, D/o Mr. Kingsly |
| 22nd June | Mrs. Sheeba Sujith, W/o Mr. Sujith Gladson |
| 22nd June | Mr. J. Robin Devadhas |
| 22nd June | Miss. Bernice Gabrilla, D/o Mr. Robin Devadhas |
| 23rd June | Miss. Sharona Maceka, D/o Mr. Mohan Babu |
| 27th June | Mrs. Sathya Priya, W/o Mr. R. Ramesh |
| 27th June | Mr. Herbert Goldston |
| 27th June | Mr. V.N. Rajan |
| 27th June | Mrs. Leela Gladson |
| 29th June | Mrs. Divya Darling, W/o Mr. Kasi Raja |
| 29th June | Mr. Vimal Kumar Stephen |

## Wedding Day Anniversaries – June 2020

| | |
|---|---|
| 07th June | Mr. Issac Solomon & Mrs. Eunice Beulah Suganthi |
| 12th June | Mr. David Prabhakaran & Mrs. Menaga |
| 16th June | Mr. Atheesh Joy & Mrs. C. R. Nithya |
| 26th June | Mr. Moorthy & Mrs. Pushpa Rani |
| 28th June | Mr. Joel Gnanasekaran & Mrs. Ashika Sharon |

## ஜெபிக்க சில குறிப்புகள்

### திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

- நமது திருச்சபை போதகருக்காகவும், குடும்பத்திற்காகவும், ஆரோக்கியத்திற்காகவும், திருப்பணிகளுக்காகவும் ஜெபிப்போம்.
- நமது திருச்சபையின் முன்னாள் குருவானவர்களுக்காகவும், அவர்கள் குடும்பங்களுக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்.
- நமது சபைக்கான போதகர் விசா விரைவில் கிடைப்பதற்காகவும் ஜெபிப்போம்.
- சபையின் நிர்வாக குழுவுக்காகவும், அவர்கள் தெய்வ பயத்தோடு திருச்சபையின் கடமைகளை நிறைவேற்றிடவும் ஜெபிப்போம்.
- திருச்சபையின் கிளைச்சங்கங்கள் சிறப்பாக செயல்பட, நல்ல வளர்ச்சி காண ஜெபிப்போம்.
- எல்லா ஆராதனைகளும் சிறப்பாய் நடைபெறவும், பங்கேற்போர் தேவாசீர்வாதம் பெறவும் ஜெபிப்போம்.
- திருச்சபைப் பணிகளை தன்னார்வமாய், உற்சாகமாய் தாங்கிவரும் அங்கத்தினர்களுக்காக ஜெபிப்போம்.
- பலர் நம்மோடு இணைந்து ஆண்டவரை ஆராதிக்கவும், திருச்சபை புதிய வளர்ச்சி பெறவும் கருத்தாய் ஜெபிப்போம்.
- இந்தியாவிலுள்ள நமது சொந்த திருச்சபைக்காகவும், பேராயங்களுக்காகவும், அதன் வளர்ச்சிக்காகவும், பேராயர், போதகர்கள் குடும்பத்திற்காகவும், திருப்பணி வளர்ச்சிக்காகவும் ஜெபிப்போம்.

## மிஷனெரி பணிகளுக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

- நாம் தாங்கிவரும் 11 மிஷனெரிகளுக்காகவும், அவர்கள் தம் பணிக்களங்களில் செய்யும் அருட்பணிகளுக்காகவும், அவர்களது குடும்பங்களின் ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபிப்போம்.
- நமது தேசத்தில் நடைபெறும் எல்லா மிஷனெரி பணிகளுக்காகவும், பணித்தளங்களில் மிஷனெரிகள் சந்திக்கும் பிரச்சனைகளை அவர்கள் மேற்கொண்டு, தொடர்ந்து தைரியமாய் ஊழியம் செய்ய இறைபெலன் பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.
- ஆலயங்கள் கட்டப்பட அனுமதி கிடைக்காமல் இருக்கிற திருச்சபைகளுக்காக கருத்தாய் ஜெபிப்போம்.
- வேதாகம சங்கத்தின் பணிகளுக்காக, தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.
- தொழுகைகள் நடத்த இயலாமல் தடைபடுத்தும் மக்கள் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

## தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

- தேசத்தலைவர்களுக்காகவும், அரசு அதிகாரிகளுக்காகவும், அதிகாரத்திலுள்ள அனைவரும் நேர்மையும் பயனுள்ள வகையிலும் ஆளுகைசெய்ய ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- இன்றைய நம் நாட்டின் எல்லாத் துறைகளிலும் லஞ்சம் தலைவிரித்தாடுகிறது. இதனால் ஏழை எளிய மக்கள் அரசு சலுகைகளை, உரிமைகளைக்கூட சரிவர பெறமுடியாதச் சூழலில், ஊழல் என்னும் தீமை அகல ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- மது என்னும் தீமை இன்றைய சமுதாயத்தையும், குடும்பத்தையும், தனிமனித வாழ்வையும் பெரிதும் பாதித்துவரும் சூழலில் தமிழகத்தில் பூரண மதுவிலக்கு கொண்டுவரப்பட ஆண்டவரை நோக்கி மன்றாடுவோம்.
- வாழ்வில் குறுக்கிடும் துன்பம், தோல்வி, நோய், கடன்பாரம் போன்றவைகளுக்கு தீர்வு தற்கொலையே என்கிற முடிவில் பலர் தங்களுக்கு ஆண்டவர் ஈவாக தந்த உயிரை தாங்களே அழித்து வருகின்றனர். குறிப்பாக இளம் தலைமுறையினரே அதிக எண்ணிக்கையில் தற்கொலை செய்துவரும் சூழலில், தற்கொலை என்னும் தீமை முழுமையாக அகல ஆண்டவரிடம் மன்றாடுவோம்.

- வேலையின்றி வாடுவோருக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க அரசு புதிய தொழில் நிறுவனங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- இந்திய தேசத்தின் பொருளாதார வீழ்ச்சி நிலைமாற மன்றாடுவோம்.

### குடும்பங்களுக்காக ஜெபிக்க:-

- இந்த புதிய மாதத்தில் கர்த்தர் நம் ஒவ்வொருவரது குடும்பங்களையும் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.
- சிறுகுழந்தைகள், சிறுவர்கள், வாலிபர்கள், பெற்றோர், முதியோர் என எல்லாரும் ஆண்டவரது கிருபை பெற்றிட ஜெபிப்போம்.
- வியாதி, கடன், வேலை இழப்பு, விசா பிரச்சனை, எதிர்பார்ப்புகள் நிறைவேறாமை, குழந்தையின்மை, வழக்குகள் இவற்றினால் கஷ்டபடுகிறவர்களுக்காக ஜெபிப்போம்.
- தீய பழக்கமுடையோரின் மனமாற்றத்துக்காக ஜெபிப்போம்.
- கருவுற்றிருக்கிற சகோதரிகளின் உடல்நலத்திற்காகவும், சுகமான விடுதலைக்காகவும், தாய் சேய் ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்.

## சிறப்பு இறைவேண்டல்

அன்புடையீர்,

உலகையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் மிகப்பெரியத் துன்பம் கொரோனா என்னும் வைரஸ். இந்தக் கொடியக் கொள்ளைநோய் பலரின் வாழ்வை அழித்துள்ள நிலையில், உலகமே இந்த வைரஸின் துன்பத்தை எண்ணி அச்சமுடன் உள்ளது. இந்தத் துன்பம் அடியோடு அகலவும் மக்கள் அமைதியுடனும், நலமுடன் வாழவும் அனைவரும் தங்கள் இல்லங்களில் குடும்பமாகக் கூடி உபவாசத்துடன் இறைவேண்டல் செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

### இறைவேண்டல் குறிப்புகள்:-

1. கொரோனா வைரஸின் வீரியம் செயல் இழந்து முழுமையாக அழிக்கப்படவும்.....
2. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளோர் முழுமையான விடுதலை பெறவும்.....
3. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் குறித்த பயம் அகன்றிடவும்......

4. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் பரவாமலிருக்கவும், அதற்கு மக்கள் முழுமையான ஆதரவு கொடுக்கவும்......
5. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் குறித்த விழிப்புணர்வுகள், முயற்சிகள் முழுமையான பலனைத் தரவும்......
6. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோயால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சரிவிலிருந்து நாடுகள் மீண்டுவரவும்......
7. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய்க்கு எதிராக அரசு மேற்க்கொள்ளும் முயற்சிகள் வாய்க்கவும்......
8. மருத்துவமனையில் பணிசெய்கிற ஊழியர்களுக்காகவும் (Doctors, Nurses மற்றும் அனைத்து உதவி பணியாளர்களுக்காகவும்) மற்றும் சுகாதர துறையில் பணிசெய்கிற அனைத்து பணியாளர்களுக்காகவும்...
9. 210-க்கும் அதிகமான நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளது. எல்லா நாடுகளும் பாதுகாக்கப்படவும்.....
10. இந்தியா தேசத்திலும் நாம் வாழுகின்ற ஓமான் தேசத்திலும் இந்த வைரஸ் வேகமாக பரவிவருகிறது. அதன் வீரியம் குறைந்து தேசத்தின் அனைத்து மக்களும் பாதுகாக்கப்படவும்....
11. குடும்பமாக வீட்டில் இருக்கிற நாட்களில் கர்த்தரை அதிகமாக தேடவும், தேவ சமாதானம் குடும்பத்தை ஆளுகை செய்யவும்....

**இணைந்து மன்றாடுவோம்! இனிய வாழ்வு பெறுவோம்!!**

## அனுதின மன்னா – ஜூன் 2020

ஒவ்வொரு நாளும் வாசிக்கிறதற்காக ஒரு திருமறைப்பகுதி ஒவ்வொரு நாளுக்கும் தரப்பட்டுள்ளது, வாசித்து தியானித்து பயனடையுங்கள். குடும்ப ஜெபத்திற்கு இந்த பகுதியை பயன்படுத்துங்கள்.

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| ஜுன் 1 | திங்கள் | ரோமர் 8:5-11 | ரோமர் 8:9 | யோபு 35-38 |
| ஜுன் 2 | செவ்வாய் | 1கொரி. 12:1-11 | 1கொரி. 12:7 | யோபு 39-42 |
| ஜுன் 3 | புதன் | 1கொரி. 2:6-12 | 1கொரி. 2:7 | சங்கீதம் 1-7 |
| ஜுன் 4 | வியாழன் | ரோமர் 8:12-17 | ரோமர் 8:15b | சங்கீதம் 8-14 |
| **ஜுன் 5** | **வெள்ளி** | **யோவா. 14:14-21** | **யோவா. 14:14** | **சங்கீதம் 15-18** |
| ஜுன் 6 | சனி | ரோமர் 8:25-31 | ரோமர் 8:31 | சங்கீதம் 19-24 |

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| ஜுன் 7 | ஞாயிறு | பிரசங்கி 8:1-16 | பிரசங்கி 8:5 | சங்கீதம் 25-30 |
| ஜுன் 8 | திங்கள் | சங்கீதம் 111 | சங். 111:10 | சங்கீதம் 31-35 |
| ஜுன் 9 | செவ்வாய் | சங்.119:97-104 | சங். 119:100 | சங்கீதம் 36-39 |
| ஜுன் 10 | புதன் | ஆதியாகமம் 39 | ஆதி. 39:9 | சங்கீதம் 40-45 |
| ஜுன் 11 | வியாழன் | யாத். 35:30-35 | யாத். 35:32 | சங்கீதம் 46-50 |
| **ஜுன் 12** | **வெள்ளி** | **உபா. 4:1-10** | **உபா. 4:5** | **சங்கீதம் 51-57** |
| ஜுன் 13 | சனி | நீதி. 24:13-24 | நீதி. 24:14 | சங்கீதம் 58-65 |
| ஜுன் 14 | ஞாயிறு | ரோமர் 8:18-25 | ரோமர் 8:22 | சங்கீதம் 66-69 |
| ஜுன் 15 | திங்கள் | ஆதி. 2:4-15 | ஆதி. 2:15 | சங்கீதம் 70-73 |
| ஜுன் 16 | செவ்வாய் | ஆதி. 1:11,12, 29-31 | ஆதி. 1:31 | சங்கீதம் 74-77 |
| ஜுன் 17 | புதன் | ஆதி. 2:19-21 | ஆதி. 2:19 | சங்கீதம் 78-79 |
| ஜுன் 18 | வியாழன் | ஆதி. 26:12-22 | ஆதி. 26:12 | சங்கீதம் 80-85 |
| **ஜுன் 19** | **வெள்ளி** | **லூக். 21:29-33** | **லூக். 21:33** | **சங்கீதம் 86-89** |
| ஜுன் 20 | சனி | 2இராஜா. 5:9-15 | 2இராஜா. 5:14 | சங்கீதம் 90-95 |
| ஜுன் 21 | ஞாயிறு | மாற்கு 3:1-6 | மாற்கு 3:5,6 | சங்கீதம் 96-102 |
| ஜுன் 22 | திங்கள் | சங்கீதம் 29 | சங்கீதம் 29:1 | சங். 103-105 |
| ஜுன் 23 | செவ்வாய் | ஆதி. 22:1-9 | ஆதி. 22.8 | சங். 106-107 |
| ஜுன் 24 | புதன் | யோசுவா 24:14-21 | யோசுவா 24:15 | சங். 108-114 |
| ஜுன் 25 | வியாழன் | சங்கீதம் 15:1-7 | சங்கீதம் 15:2 | சங். 115-118 |
| **ஜுன் 26** | **வெள்ளி** | **2நாளா. 29:25-30** | **2நாளா. 29:28** | **சங்கீதம் 119** |
| ஜுன் 27 | சனி | அப். 2:1-11 | அப். 2:1 | சங். 120-125 |
| ஜுன் 28 | ஞாயிறு | தீத்து 2:7-15 | தீத்து 2:15b | சங். 126-132 |
| ஜுன் 29 | திங்கள் | மத்தேயு 9:9-13 | மத்தேயு 9:13 | சங். 133-139 |
| ஜுன் 30 | செவ்வாய் | மாற்கு 8:34-38 | மாற்கு 8:34 | சங். 140-145 |
| ஜுலை 1 | புதன் | பிலிப். 3:7-11 | பிலிப். 3:7 | சங். 146-150 |
| ஜுலை 2 | வியாழன் | லூக்கா 14:25-27 | லூக்கா 14-27 | நீதி. 1-3 |
| **ஜுலை 3** | **வெள்ளி** | **அப். 7:54-60** | **அப். 7:56** | **நீதி 4-6** |

# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்


**Contact: Rev. Dr. N. Jesin**

**GSM : 9693 3489**

**Land Line : 2470 5784**

**E-mail : csitco@gmail.com**

**www.csitamilchurchoman.org**



**(For Private Circulation Only)**